# வெற்றிமணி

## மாணவர் பத்திரிகை



விலை 18 சதம்

1 - 5 - 57

மலர் 3. | ஆசிரியர்:- வித்துவான் மு. கந்தையா | இதழ் 5

## விவேகப்போட்டி இல 3 இன் முடிவு.

**சரியானவிடை.**

1. சமம். 2. யுத்தி. 3. சோகம். 4. பாட்டி. 5. கௌரம். 6. அவம்.

**முதற்பரிசு ரூபா 300.** முற்றிலும் சரியானவிடையனுப்பிய கீழ்க் காணும் மூவரும் தலைக்கு ரூபா 100 பெறுகின்றனர்.

1. ஏ. வேலுப்பிள்ளை, மாவிட்டபுரம், தெல்லிப்பளை.
2. எஸ். ஏ. சர்மா, தவசியாகுளம், வவுனியா.
3. எஸ். அண்ணாமலை, மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பளை.

**இரண்டாவது பரிசு** ரூபா 150.

ஒருபிழையுடன் விடையனுப்பிய கீழ்க்காணும் 17 பேரும் தலைக்கு ரூபா 8 சதம் 83 பெறுகின்றனர்.

பி. கணிகைநாதன், மன்னார். ப. இரத்தினராசா, காங்கேசன்துறை. என். ஏ. சூசையா, வங்காலை. ஆர். சுப்பையா, உலுகலை. ரி. எம். அனிபா, அக்கரப்பத்தனை. கே. சோமசுந்தரம், திகாரியா. ரி. எவ் யோசெப், யாழ்ப்பணம். க. சிவகுரு, ஏழாலை. திருமதி அடைக்கலம். யோசெப், நாரனட்டான் வி. வன்னியசிங்கம், தெல்லிப்பழை. எஸ். சோமசேகரம், பெரியபோரதீவு. சோ. குணவதி, உடுப்பிட்டி. எம். வரதராஜா, அக்கரப்பத்தனை. பி. சின்னத்துரை, பேராதனை. எஸ் ஞானபூரணம், பெரியபோரதீவு. கே. இரங்கநாதன், றத்தோட்டை. மகேஸ்வரி, நாகலிங்கம், யாழ்ப்பணம்.

**விசேஷபரிசு:-** 25 ரூபா, 20 ரூபா வுக்குமுறைய கூப்பன்கள் அனுப்பிய ஏ. வேலுப்பிள்ளை, எஸ். அண்ணாமலை முறையே ரூபா 35. ரூபா 15 விசேஷபரிசாகப் பெறுகின்றனர். பரிசுத்தொகைகள் 20-5-57க்கு முன் அனுப்பப்படும்.

---


## புளக்தேவையா?

விளம்பரங்களுக்கும், பாடசாலைப்பத்திரிகைகளுக்கும், கடிதத்தலைப்புகளுக்கும். இன்னும் வேறு தேவைகளுக்கும் வேண்டிய புளக்குகளைக் குறைந்தவிலையில் இந்தியாவில் செய்வித்துத்தரமுடியும். வெற்றிமணி ஆண்டுமலரிலும் இவ்விதழிலும் உள்ள புளக்குகளைப்பாருங்கள். அளவுகளைக்குறித்து விலைவிபரங்களுக்கு எழுதுக. இரண்டு, மூன்று கலர்களிலும் புளக்செய்யமுடியும்.

**Vettimani, 57 Ambagamuwa Rd, Nawalapitiya.**

# விவேகப்போட்டி இல. 4

## மொத்தப்பரிசு ரூபா. 350-00

**முதற்பரிசு ரூ. 200.** **இரண்டாவது பரிசு ரூ. 100.**

விசேஷபரிசு முதலாவது ரூபா 35-00 இரண்டாவது ரூபா 15-

## முடிவு திகதி 28-5-57 செவ்வாய்க்கிழமை பி. ப. 5 மணி

சரியானவிடை 28-5-57 பி. ப. 5-15 மணிக்கு நேயர்கள் முன்னிலையில் விவேகப் போட்டிநிலையத்தில் (57, அம்பகமுவ வீதி) திறக்கப்படும்.

**கவனிக்க** சரியான விடையும் பரிசுபெற்றோர் விபரமும் தனித்தனியனுப்பப்பட மாட்டாது. புதிய கூப்பன்கள் போட்டியிற்பங்குபற்றும் ஒவ்வொருவருக்கும் அனுப்பப்படும். சரியான விடையும் பரிசுபெற்றோர் விபரமும் 1-6-57 வெற்றிமணியில் வெளியிடப்படும். விடைகளுடன் 20சத முத்திரை அனுப்புகிறவர்களுக்கு சரியான விடை, பரிசுபெற்றோர் விபரம் போட்டி இல. 5 க்கு வரக்கூடிய விடைகளடங்கிய வெற்றிமணியனுப்பப்படும். போஸ்ரல் ஆடரில் 20 சத முத்திரையை உரிய இடத்தில் ஒட்டியனுப்புக.

### பிரவேசக்கட்டணம்

1 கூப்பன் அனுப்ப 50 சதம் 3 கூப்பன்கள் அனுப்ப 1 ரூபா.
3 ரூபாவுக்கும் அதற்குமேலும் கூப்பன்கள் அனுப்புகிறவர்கள் ரூபாவுக்கு 4கூப்பன்கள் வீதம் அனுப்பலாம் உதாரணமாக 3 ரூபாவுக்கு 12 கூப்பன்கள்.

### நிபந்தனைகள்

1 அச்சுக் கூப்பன்கள் கிடையாவிடில் தனிக்காகிதத்தில் விடைகளை எழுதியும் அனுப்பலாம். வர்க்கமுறைப்படியும் அனுப்பலாம்.

2 முடிவு திகதிக்குப்பின் கிடைக்கும் கூப்பன்களும் உரிய பிரவேசக்கட்டணமின்றி வரும் கூப்பன்களும் நிராகரிக்கப்படும்.

3 விடைகளும் பிரவேசக் கட்டணங்களும் கீழ் விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும். மற்றவிதிகள் முன்போல்.

VIVEKAPPODDY. 57, Ambagamuwa Road, Nawalapitiya

---

## மாணவர்களுக்கு ஓர் சந்தோஷச்செய்தி

பலமாணவர்களின் விருப்பப்படி வெற்றிமணியின் வருட சந்தா 2 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது. தனிப்பிரதி 18 சதம் ஏஜண்டுகளிடம் பிரதிகள் உரியகாலத்தில் பெறமுடியாதெனக் கருதுகிறவர்கள் 20 சதமுத்திரையனுப்பினால் தபாலில் அனுப்பிவைக்கப்படும். எஸ். எஸ். ஸி. மாணவர்களின் பரீட்சைக்கு உதவியாக இருக்கக்கூடிய விஷயங்கள் ஒவ்வொன்றுயினும் ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்படும். இன்றே சந்தாவை அனுப்புங்கள். 1-6-57 வெற்றி மணியில் மாணவர்மன்ற அங்கத்தவர்களுக்கு கட்டுரைப்போட்டி வெளியிடப்பட்டுள்ளது.

Vettimani - Nawalapitiya

## விவேகப்போட்டி இல 4

| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| 1 | ......லம் | ......லம் | ......லம் | ......லம் | ......லம் | ......லம் |
| 2 | ......ரிவு | ......ரிவு | ......ரிவு | ......ரிவு | ......ரிவு | ......ரிவு |
| 3 | ......னம் | ......னம் | ......னம் | ......னம் | ......னம் | ......னம் |
| 4 | ......கம் | ......கம் | ......கம் | ......கம் | ......கம் | ......கம் |
| 5 | ......யம் | ......யம் | ......யம் | ......யம் | ......யம் | ......யம் |
| 6 | ......லம் | ......லம் | ......லம் | ......லம் | ......லம் | ......லம் |

வரக்கூடிய விடைகள் 1-5-57 வெற்றிமணி யிலுண்டு இவற்றிலே யிருந்துதான் விடைகளெடுக்கப்படும்

பெயர்.................................................................................................

விலாசம்.............................................................................................

போஸ்ரல் ஆடர் } இல.........
பி. க. கூப்பன் }

கூப்பன் தொகை............
ஏஜன்சி இல.................

## குறிப்புகள்

1 இது உண்டவர் பிழைப்பது எது?
2 காரணமின்றி ஒருவரில் எவராவது ......கொள்வார்களா?
3 தன் இதை இழக்க யார்தான் விரும்புவர்
4 சிலர் பேசும்போது இதாகப் பேசுவார்கள்
5 நம்பிக்கையுள்ள வேலேக்காரரிடம் ......இன்றி வீட்டுத்திறப்பைக்கைக் கொடுத்துப்போகலாம்.
6 யானையை ஒருவன் தூக்கினல் அவனுக்கு எவ்வளவு ......இருக்கவேண்டும்

## வெற்றிமணி மாணவர் மன்றம்

21 வயதுக்குட்பட்டவர்களும் பாடசாலை மாணவர்களும் மாணவர் மன்றத்தில் சேரலாம். விண்ணப்பப்பத்திரம் தேவையானோர் எழுதுக. அங்கத்தவர்களும் 25–5–57 க்குமுன் அங்கத்தவர்களாகச் சேருகின்றவர்களும் கட்டுரைப்போட்டியிற் பங்குபற்றலாம். விபரங்களுக்கு 1–5–57 வெற்றிமணியைப் பார்க்கவும்-

## விவேகப்போட்டி இல. 3-இன் சரியான விடை

**1 சமம் 2. யுத்தி 3. சோகம் 4 புாட்டி 5. கௌரம் 6. அவம்.**

வெற்றிமணி விற்பனைசெய்யவும் விவேகப்போட்டிக் கூப்பன்கள் விநியோகஞ்செய்யவும் முற்பணங்கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை. நல்லகமிஷன் உண்டு எழுதுக-

# எதுவேண்டுஞ்சொல்தமிழா?

இலங்கையிலே டொனமூர்த்திட்டம். சோல்பரித்திட்டம், குடியேற்றத்திட்டம், இலங்கையில் ஒருபகுதியாரைக் குடிகலைக்குந்திட்டம் எல்லாம் திட்டமிட்டுத்திட்டமிட்டுத்தீட்டிவிட்டார்கள். பெறுபேறென்ன? இலங்கைத்தமிழரின் பிரஜாவுரிமை பிடுங்கப்பட்டுவிட்டது. வாக்குரிமை வஞ்சிக்கப்பட்டுவிட்டது. குடியுரிமை குட்டிச்சுவராக்கப்பட்டுவிட்டது. போதாக்குறைக்குத் சிங்களச்சட்டம் சிறிச்சட்டம் எல்லாம் சட்டஞ் சட்டமாகப் பூட்டிவிட்டார்கள். இச்சட்டங்கள் எல்லாம் பூட்டிய ஆட்சித்தொட்டிலிலேசிங்களத்தைமட்டுமே சீராட்டுவார்களாம், தமிழ்தரையில்மட்டுமே தவழவேண்டுமாம். "காரியாலயம்" என்று படித்தபிள்ளைக்கு உத்தியோகமில்லையாம்! "கந்தோருவ" என்றுபடித்தபிள்ளைக்கு உத்தியோகமாம். என்ன நடக்கின்றது? இலங்கைத்தமிழரின் மொழியுரிமை ஒரேயடியாக முழுங்கப்பட்டு வருகின்றது. முற்றுமுழுவதாக முழுங்கப்பட்டுவிடவேபோகின்றது. தமிழினத்தைஒழித்துக்கட்டும் இத்திட்டங்கள் சட்டங்கள் எல்லாவற்றையும் மட்டந்தட்டுவதற்காகத் தம் உயிரையே பணயம் வைத்தாடுங்கட்டம் இலங்கைத் தமிழர் கட்டம்.

கடைசி, இக்கட்டத்திலாயினும் இலங்கைத்தமிழர் விழித்தெழுந்துவிட்டார்களா? ஆம்! என்று ஆனந்தமாகச் சொல்வதற்கில்லை. இன்னும் அரையுறக்கத்திலேதான் அநேகரைக்காண்கின்றோம். தூக்கத்திலேசுகித்திருக்குந் தமிழர், தொகைதொகையாய்க் கிடக்கிறார்கள், சற்றுத்தட்டியெழுப்பிக்கேட்டால் தருணத்துக்குத்தக்கவாறு சமாளித்துக்கொள்ள விரும்புகிறார்கள். தயவுசெய்து மன்னிக்கவேண்டும்.

ஒரு சிறுசம்பாஷணை:-

**ஆவணிப் போராட்டமல்லவா வருகிறது?**
**அப்படியா? நடக்கட்டும்.**
**சரி தொண்டர்படையில் ஒருவரைச் சேர்த்துகொள்ளலாம் தானே!**
**என்ன! சா அய்...! எனக்கு மூச்சுவிடக்கூட நேரமில்லை.**
**பின்னை, கொஞ்சம் பண உதவியாவது...!**
**இந்தநேரத்திலேவந்தால் நான் என்ன செய்யமுடியும். வீடுகட்டிக் குறையிலேகிடக்கிறது. மேசன் காசுக்குவந்துவிட்டுப் போகிறான், இப்போதான் நீங்கள் வழியிலே கண்டிருப்பீர்கள்.**
**அட! நாடு நிச்சயமில்லையப்பா! நீ வீட்டுக்கு அழுது தொலைக்கிறாயே! வீட்டைப்பிறகுபார், முதலில் நாடு வேண்டும் ஐயா! சுவர் இருந்தால் தானே சித்திரம் எழுத!**
**பின்னை என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?**
**இதோபார்! இவ்வளவு சிறுதொகையாவது கொடுத்துவிடு. இந்தப்போராட்டம் வெற்றிகரமாய் முடியட்டும்.**
**ஆ! என்ன இது! பயங்கரம்! பயங்கரம்! நமக்குமுடியாது...**
**மூச்சுவிடக்கூட நேரமில்லாமல் உழைக்கிறேன் என்கிறாயே! இதையாவது செய்து தொலைக்க மாட்டாயா?**
**அப்படியானால் ஐந்தாறுமாசம் கழித்து வாருங்கோ யோசிப்போம்.**

தமிழுணர்ச்சி எங்கே துடிக்கிறது? தமிழ்மானம் எங்கே பொங்குகிறது? தமிழ்த்துடிப்பு எங்கே உறங்குகிறது? இந்தநிலையை எண்ணிப்பார்க்கிறபோது உண்மையிலே சிரிப்புத்தான் வருகுதையா!

காற்றுக்கசைந்த மரக்கொம்பு, அங்கு கட்டியிருந்தபறையிலே தற்செயலாய்த்தட்டியபோது கிளம்பினசத்தங்கேட்டுப் போர்ப்பறைச்சத்தமென்று கருதிப் போருக்குப்புறப்பட்ட வீரத்தமிழன் சந்ததியான், போராட்டம் என்றசொல் செவியிலேதிணிக்கப்பட்டபிறகாவது துடிக்கின்ருனு? துள்ளியெழும்புகின்ருனு?... தூங்குகின்ருன். ஆகா! சிரிப்புத்தான் வருகுதையா.

தொண்டராய்ச்சேர்வதிலுள்ள சிரமத்தை எண்ணித் தயங்குகின்ருனு? தியாகியாய்ப்போவதன் சிறப்பைநோக்கி இயங்குகின்ருனு? காசு கொடுப்பதன் கஷ்டத்தை எண்ணுகின்ருனு? கொடாமையினுல் விளையும் நஷ்டத்தை எண்ணுகின்ருனு? கஷ்டம்வந்தால் தனிப்பட்ட ஒருவனுக்கு; நஷ்டம்வந்தால் இருபத்தைந்திலட்சந்தமிழருக்கு. "நான்கெட்டாலும் நாடு வாழவேண்டும்; தான்கெட்டாலுந் தன்குலந்தழைக்கவேண்டும்" இந்தக்கொள்கை தமிழினத்துக்குப்புதிதல்லவே, வீட்டுக்கொரு ஆண்மகன் நாட்டைக்காக்கப் புறப்பட்டசெய்தி இன்றுநேற்றல்ல, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்டதல்லவா?

மேடையிலே படாடோபமாகப்பேசிவிட்டுப் பாதுகாப்பாக வீட்டிடுக்குச்செல்லுந் தலைவர்கள்சிலர் தாமும் போராட்டம் நடத்துவதாகத்தான் சொல்லிக்கொள்ளுகின்ருர்கள். பேசிப் பேசி அலுத்தவர்களேயொழியப்பிரச்சனைபிரச்சனையாகவேயுள்ளது. போராட்டம் என்பதற்கு அவர்கள் கொடுத்துள்ள அர்த்தம் முற்றிலும் வியர்த்தமானது. அது வாயாட்டமேதவிரப் போராட்டமாகாது. பின்னை, போராட்டம்என்பது என்ன? சித்தசுத்தியோடு நேரடி நடவடிக்கையிலிறங்கித் தன்குறிக்கோளைச்சாதித்தலே போராட்டமென்று பெயர்பெறும். இது காந்திஜீ காட்டியவழி.

உலகவிமோசனத்துக்குரிய இந்த ஒரேவழியைப் பின்பற்றத் தமிழினமே! நீயேன் இன்னும் ஏகோபித்தெழவில்லை. என் இன்னுந்தயங்குகின்ருய்!? நீயசையாதிருக்குமட்டும் உன்உரிமைகளை யார்கொண்டுவந்து தரப்போகின்ருர்கள். ஒன்றுபட்டெழு. உன்உரிமைக்காகப் போராடி வெற்றியீட்டு. வெற்றியீட்டியபோதே வீரமுடிசூட்டி மங்கலகீதம் பாடி உன்னைமகிழ்ந்து வரவேற்க உலகங்காத்துக்கொண்டிருக்கிறது. உலகத்தின் ஆசிகள்உன்னை மேலும்மேலும் ஊக்குவனவாக.

தாழ்ந்துபோனதமிழினம் இன்னும் தாழவேண்டுமா? அல்லது இனியாவது தலைதூக்கிவாழவேண்டுமா? எதுவேண்டுஞ்சொல்தமிழா?

## தம்பி கேள்!

(ஆர், ஆர், என். ஜார்ஜ் B. A)

1. பெற்றவர் போற்றிடு தம்பி—நல்ல
பெரியோர் சொல்லினைக் கேளு
குற்றங்கு றையற்ற தோழர் — தமை
கொண்டிடு நண்பராய் என்றும்

2. எறும்பினைப் போலவே என்றும்--காலை
எழுந்திடு வேலைகள் செய்ய
பொறுமையாய் புத்தியாய் வாழ—அன்னை
புகட்டிடும் மொழிகளைக் கேளு

3. ஆட்டமும், ஓட்டமும் போடு—தினம்
அன்புட னே விளை யாடு
தோட்டத்துச் செடியையும் பேணு — என்றும்
தின்றிடு கனிபல நன்றாய்

4. வேளை த வறியே உண்டு — நீயும்
வேதனை கொள்ளாதே தம்பி
ஏழைக்கு அன்புநீ காட்டு — மற்றோர்
ஏற்றத்தைக் கண்டு பாராட்டு

5. தேனியைப் போன்றுநீ தம்பி — உயர்
தேனும நிலையையே தேடு
நாலுதி சைகளும் சென்று — நல்லோர்
நவின்ற நன்மொழி சேரு

6. தோல்வியி னல் கலங் காதே — தம்பி
தன்னம்பிக் கையிழக் காதே
வேலைகள் செய்திட தம்பி — நீயும்
வீணாய்க்கா லங் கடத் தாதே

7. நல்லவ னகநீ வாழு—என்றும்
நன்மையைச் செய்திடப் பாரு
சொல்லிலே பண்பையே காட்டு — அன்பின்
செயலால் நன்மையை ஈட்டு

---

## இந்தியா நேயர்களுக்கு

வெற்றிமணிக்குரிய சந்தாத்தொகையைக் கீழேயுள்ள விலாசத்திற்கு அனுப்பி எமக்கும் அறிவிக்க, பிரதிகள் தபாலில் நேரேயனுப்பிவைக்கப்படும். பிரதிகளும் மாணவர்மன்ற அங்கத்தவர் பத்திரங்களும் இவரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கா. தமிழ்த்தம்பி
தேவாங்கர் உயர்நிலைப்பள்ளி
சின்னாளபட்டி, மதுரைமாவட்டம்

தொடர்ச்சி 3.

# தமிழ்த்தீவு

## காட்சி 4.

இடம்:- கஸ்தூரிபாய் மருத்துவமனே. **காலம்**:- காலே 10 மணி. [ஆஸ்பத்திரியில் ஒரேகூட்டமாயிருக்கிறது. ஆனந்தன் முண்டியடித்துக்கொண்டு டாக்டரின்முன் சென்றுவிடுகிறுன்]

ஆ:- வணக்கம்சார்!

டாக்டர்:- சரி, சரி! நாக்கைநீட்டு.

(ஆனந்தன் பயந்து நாக்கை நீட்டுகின்றுன்)

ஆ:- சார்! எனக்கு ஒண்...

டா:- உனக்கு ஒன்றும் செய்யாதுடாபையா. சரி, வயிற்றைக்காட்டு. (ஆனந்தன் இயந்திரம் போல் சட்டையைத் தூக்கி வயிற்றைக் காட்டுகிறுன். டார்டர் அதைப் பரிசோதித்துக்கொண்டே) காலேயில் என்ன சாப்பிட்டாய்?

ஆ:- ஒன்றுமே சாப்பிடவில்லே. சார்—எனக்கு...

டா:- (சற்று கண்டிப்புடன்) உனக்கு என்னதான் செய்கிறது. சீக்கிரம்சொல்.

ஆ:- சார்! எனக்கு ஒண்ணும் செய்யலே.

டா:- [கோபமாக] என்ன?

ஆ:- [பயந்து கொண்டே] சார்! எங்கம்மாவுக்குத்தான் இரண்டுவாரமாக ரொம்பக்காய்ச்சல். இருமலும் அதிகம். மருந்துவாங்க இப்பதான் காசுகிடைச்சுது. எங்கப்பாவும் பர்மாவிலிருந்து இன்னும் வரலே. (அழுகிறுன்)

டா:- ஐயோபாவம்! அழாதே தம்பி, உனக்கு மருந்துதானே வேண்டும்நான் தருகிறேன். காசுவேண்டாம்.

ஆ:- சார்! எங்கம்மாவால் எழுந்திருக்கக்கூடமுடியாது. சார்! நீங்க வந்து பாத்திட்டுப்போயிடுங்கசார் - ஜட்கா அமர்த்தியிருக்கேன், டாக்டர்சார்.

டா:- தம்பி, இங்கேபார்! (கூட்டத்தைச் சுட்டிக்காட்டுகின்றுர்) இத்தனேபேருக்கும் மருந்து கொடுக்கணுமே. நீயேசொல்லு. இப்போ! நான் வரமுடியுமா?

ஆ:- சார்! எனக்குப் பயமாயிருக்குசார்—எங்கம்மாவைக் காப்பாத்துங்க சார். (டாக்டருடைய கால்களேப் பிடித்துக்கொண்டு அழுகிறுன்) அம்மா... அம்மா!

நிற்பவர்கள்:- ஐயோ பாவம்!

டா:- அழாதேதம்பி! எழுந்திரு வா. உங்கவீட்டிற்குப்போவோம் (மற்றவர்களேப்பார்த்து) சற்று நேரம் பொறுத்துக் கொள்ளுங்கள். அரைமணிநேரத்தில் வந்துவிடுகிறேன். வாதம்பி போகலாம்.

ஆ:- (டாக்டருடைய பெட்டியைத் தூக்கிக்கொண்டே) சரிங்கசார்! (இருவரும் போகிறுர்கள்)

[தொடரும்]

# ஜாலத்தீவு.

(கா, தமிழ்த்தம்பி, சின்னுளபட்டி)

அந்தஜீவன்களனைத்தையும் மரம் தன்னுரிமையாக்கிக்கொண்டு மீண்டும் முன்போலநின்றது. பக்கத்திலிருந்த பலாமரத்திலிருந்த ஒருபழம் வெடித்துச்சிதறியிருந்தது. அந்தச்சுளைகள் ஒவ்வொன்றும் ஏதேதோ கூறிச் சிரித்தன. இடியட்டின் நாவில் நீர் சுரந்தது. நல்லவேளை! நீட்டிய அவன் கையை சிந்தன் தடுக்கவே போகாமலிருந்துவிட்டான்.

**கமிஷனர் நாகராஜனுக்கோ ஒரே வியப்பு!**

மிஸ்டர் சிந்தன்! முறிந்த ஆலமரம் மீண்டும் தலைநிமிர்ந்துவிட்டதே எப்படி?

"இதுதான்சார் ஜாலத்தீவு என்பது. இங்குள்ளவிசித்திரமரங்களில் இதுவுமொன்று. எந்தஜீவன் கிடைத்தாலும்சரி, எதிர்பாராமல் அகப்பட்டுக்கொண்டால் உடனே இதுபிடித்து ரத்தமெல்லாவற்றையும் உறுஞ்சிக்கொண்டு எலும்புகளை மட்டுந்தான் கீழேபோடும். நீங்கள் நினைப்பது போல இதுஆலமரமல்லசார்; இதுஒருவகையான விஷவிருட்சம். அதோ பாருங்கள் எலும்புக் குவியலை!" என்று சிந்தன் சுட்டிக்காட்டினார். அது கேட்ட கமிஷனருக்கு பெரிய திகிலடித்துவிட்டது.

"ஐயையோ!... இந்தக்குன்றுஎதுவும் நம்மை விழுங்கிவிடப்போவுது மிஸ்டர்! ஆபத்து!" என்றுகத்தினர் கமிஷனர்.

**அப்போது**

மிகப் பெரியதொரு கரும் புரவியொன்று கனைத்துக் கொண்டே நாலுகால் பாய்ச்சலில் தாவியோடியது. அதன்பின்னாலே நாலைந்து வெண்புரவிகளும் ஓடின. அவைகள் வாயைத்திறந்து கனைத்தபோதெல்லாம் அக்கினிப்பிளம்பே வெளிப்பட்டது.

"மிஸ்டர் சிந்தன் எனக்கு என்னவோ பயமாக இருக்கிறது" நன்ருகச் சொன்னீர்கள். அதோபாருங்கள் ஒருபெரிய முதலை மேட்டில் கிடக்கிறது. இன்னும் தாமதித்தால் ஆபத்து. உம்! மூவரும் அந்தக் குன்றைவிட்டுக் கீழிறங்கி எங்கோ ஓடினர்.

அந்தக்கரியகுகையினுள் மூவரும் சென்றனர். உள்ளே குகையின் ஒருபாகத்தில் பாட்டிமுதல்-பாப்பாவரை இப்படியான கணக்கற்றபதுமைகள் வைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொன்றையும் குஷாலாகப் பார்த்தவாறே வந்தான் இடியட்.

அங்கிருந்த ஒரு தாத்தாபதுமையைத் தொட்டதுதான்தாமதம்! மறுகணம் இடியட்டும் அதேபோலாகிவிட்டான். ஏதோகூற வாயெடுத்த சிந்தன் இம்மாற்றங்கண்டுமனங்கலங்கினர். கமிஷனரோ பாவம்ஒன்றும்புரியாமல் விழித்தார்! அப்போது - பதுமைகள் ஏதோகூறி கல கலத்துக்கொண்டன. அவற்றைப்புரிந்துகொண்ட சிந்தனின் மூளை பலமாகவேலைசெய்ய ஆரம்பித்தது. கமிஷனரின்காதில் ஏதோகூறிவிட்டு பதுங்கிப் பதுங்கி பல திருப்பங்களைக்கடந்து முன்னேறினர். எதிரே கணக்கற்ற எலும்புக்கூடுகள் நாட்டியமாடிக்கொண்டிருந்தன. அதுகண்டசிந்தனுக்கு உள்ளூரபீதி யேற்படத்தான் செய்தது.

மண்டிக்கிடந்த இருளில் ஏதோ 'பளிச்-பளிச்' சென்று மின்னியது. மெதுவாக அடியெடுத்துவைத்தார். கையிலோ ரிவால்வார் துடித்துக்கொண்டிருந்தது. திடீரென்று காலை அங்குமிங்கும் அசைக்கமுடியவில்லை அவரால். ஆம்! எதிரே ஒரு பெரிய பாம்புதான்கிடந்தது. அதை நமனுலகனுப்பிவிட்டு மேலும் நடந்தார். உயரமான அந்தப்புற்றின் மீது ஒரு மாணிக்க அரவமொன்று தூங்கி வழிந்துகொண்டிருந்தது. துடித்துக்கொண்டிருந்த ரிவல்வரினின்று துரிதமாய்க்கிளம்பின அனற்குளம்புகள்! அடுத்தவிநாடி அந்தஅரவத்திடமிருந்த மாணிக்கம் "ஜிவ்" வென்று எங்கோ பறந்தேகியது.

**எங்கும் ஒரே எதிரொலி!**

ஏதோ சப்தம் கேட்கவே எங்கோ ஓடினர். அப்போது கமிஷனரும் — இடியட்டும் ஓடோடியும் வந்தனர்.

உள்ளே ஒருமூலையில் ஒருகோயில் தென்பட்டது. மூவரும் அங்கு சென்றனர். பாழடைந்த அக்கோவிலிலே ஒரு ரணகாளியின் கோரஉருவமும், அதன்முன்னே கணக்கற்ற மனிததலைகளும் தொங்கவிடப்பட்டிருந்தன. அதைக்காணச் சகிக்காதவனாய் கண்களைப் பொத்திக் கொண்டான் இடியட். தங்கம், வெள்ளி, கரன்ஸிக்கத்தைகள் இப்படி மலையெனக்குவிந்துகிடந்தன. மணிகள் ஏனோ திடீரென்று கலகலத்தன. அக்காளிக்கு ரத்தப் பொங்கல் படைக்கப்பட்டிருந்தது. மதுக்குடங்களின் அணிவகுப்பே அலாதி! அரூபமான ஆண்டவனுக்கு ஆபரணம், ஆஸ்தி, இன்னபிற ஆடம்பரம் முதலியவைகளைக்காட்டி ஏமாற்றுகிறார்களே அறிவுடையோர்! இனிக்காட்டுமிராண்டிகளைப் பற்றிக் கேட்பானேன்?

அங்கே ஒரு அழகிய நீர்த்தடாகமிருந்தது. அதன் விசித்திரம் என்னவெனில் கண்ணாடிபோல் நீர் காட்சியளித்தது. அதிலே ஒருஅழகிய நீலநிறமீனொன்று நீந்திக்கொண்டிருந்தது. அதைப்பிடிப்பதற்காக நீருக்குள் கையைவைத்தான் இடியட். மறுகணம் அது 'விர்' ரென்று பறவைபோல எங்கோ பறந்துவிட்டது.

அடுத்தநிமிஷம் இடியட் ஐயோ! ஐயோ!...வென்றலறத்தொடங்கினன். ஆம்! அவனது கழுத்திலே ஒருபாம்புதான் சுற்றிக்கொண்டது. சிந்தன் ஏதோ ஒரு மந்திரவார்த்தையை முணகினர். மறுகணம் அங்கிருந்தகதவொன்று 'படீ' ரென்று மூடிக்கொண்டதும் பாம்பு மறைந்துவிடவே "இனிமேல் குறும்புசெய்தால் அப்புறம்நீ முன்போல பொம்மையாகி இங்கேயே யிருக்கவேண்டியதுதான்" என்று அவனது தலையில் நாலுவைத்தார் சிந்தன்.

அந்தத் தடாகத்தில் தம் இரு கைகளிலும் நீரையள்ளி முகர்ந்து பார்த்ததும் துள்ளிக் குதித்தார் சிந்தன். கமிஷனரும் அதிர்ச்சியடைந்துவிட்டார். மறுகணம் அந்தத்தடாகம் மறைந்துவிட்டது. பதிலாக முதலையொன்றுதான் வாயைப் பிளந்தவண்ணம் தன்வடிவழகைக் காட்டிக்கொண்டிருந்தது.

**மூவரும் மிரண்டோடினர்.**

அந்தக்குகையின் ஒருபகுதியில் ஒரே கட்டாரிமயம்! சிந்தன் அதிலொன்றையெடுத்து கமிஷனரிடம் நீட்டவே அவரதுமுகம் விரிந்தது. ஆம்! அதில் 'S' என்று அடையாளமிடப்பட்டிருந்தது. பாதாளத்தை நோக்கி சலசலத்துக்கொண்டிருந்த நாக அருவியின் இரைச்சல் காதைத் துளைத்தது. நாக அருவியின் நீர் ஒரேசிவப்புநிறமுடையது; அதுமட்டுமல்ல அந்நீர் விஷத்தன்மை கொண்டதுங்கூட.

ஏதோகர்ஜனைகேட்டதுதான் தாமதம்! சித்திரக்குள்ளன்போன்ற ஒருபெரிய உருவம்தன் பளுவான உடம்பைத் தாங்கியபடியே அங்குவந்தது. தன்கையிலிருந்த மனிததலையை அக்காளிகோவிலில் தொங்கவிட்டதும் "விசில்" கொடுத்தான். அடுத்தவிநாடி? சுமார் இருநூறு குதிரை வீரர்கள் கையில் கலயமுடன் வந்துகுழுமினர்.

ஆம்! சித்திரக்குள்ளன்போன்றிருக்கும் அவன்தான் இரும்புமனிதன். அவனது உடம்பெல்லாம் எஃகுத்தகடால் மூடப்பட்டிருக்கும். மதயானையாயினும் அதன் மத்தகத்தைப் பிளந்து மண்கவ்வச்செய்யும் மகத்துவம்படைத்தோன். அவனுக்கு நிகர் அவனேதான். அவன் நடந்துசென்றால் குன்று அசைவது போன்றிருக்கும்.

அந்தகுதிரை வீரர்கள் தங்கள் கையிலிருந்தமதுக் கலயங்களைக் காலி யாக்கினர். உடனே இரும்பு மனிதனும் தன்மேலுள்ள இரும்புக்கவசத் தைக் கழற்றிவிட்டு குடிக்க ஆரம்பித்தான். சிறிதுநேரத்தில் எல்லோ ரது தலைகளும் சுழன்றன.

**அப்போது?**

கணக்கற்ற துப்பாக்கி ரவைகள் இரும்புமனிதனை நோக்கிப் பறந் தன. உடனே பயங்கரமாகச் சிரித்துக்கொண்டே தம்கையால் யாவற் றையும் தடுத்தான். இரும்புமனிதனைச் சுற்றிலும் சூழ்ந்துகொண்டன துப்பாக்கிமுனைகள்! குண்டர்களுக்கும் கான்ஸ் டேபிள் களுக்கும் பலத்த மோதல் ஏற்பட்டது.

முடிவு?

சற்றுநேரத்தில் ஒவ்வொருவரின் கையிலும் விலங்கேறியது. அப் போது கமிஷனரைநோக்கி "ஜிவ்" வென்று ஒருகட்டாரி பறந்துவரவே நல்லவேளையாக ஒதுங்கிக்கொண்டார். இரும்பு மனிதனோ விழித்தான் பாவம்! இடியெட்டோ குதித்தான் குஷியால்!

ஏதோ இடிஇடித்தாற்போன்ற ஒலிகேட்கவே விசுக்கெனத் திரும் பினார் சிந்தன். அங்கே-மூலையிலிருந்த காந்தச்சிலையிலிருந்துதான் அக் கினிப்பிளம்பு கிளம்பிக்கொண்டிருந்தது. அதன் முன்னால், ஏதோ பைத்தியம்போல் புலம்பியவாறே அமர்ந்திருந்தான் ஒருஆசாமி. ஆவே சம் பிடித்தவன்போல் எழுந்ததுமே அந்தச்சிலையின்மீது சாய்ந்தான்! மறுவிநாடி? சாம்பல்மேடுதான்காட்சியளித்தது! அந்த ஜாலத்தீவினுள் இன்னும் இயம்பமுடியாவிந்தைகளை யெல்லாவற்றையும் கண்டு வியப்பு டன் — வெற்றியுடன் திரும்பினர்.

[வளரும்]


சந்தோஷச்செய்தி!!

சந்தா குறைக்கப்பட்டிருக்கிறது.

வெற்றிமணி சந்தாவிபரம்

வருடசந்தா ரூபா 2-00   6 மாதசந்தா ரூபா 1-00

தனிப்பிரதி:- 18 சதம்

ஏஜண்டுகளிடம் பிரதிகள் கிடைப்பதில்லை எனப்பலர் புகார் தெரிவிப்பதால் நேயர்கள் தபாலில் பெற விரும்பினால் 20 சத முத்திரையனுப்புக.

Vettimani — NAWALAPITIYA.




(Photo:- JAYANTHI - GAMPOLA.)


அகில இலங்கை அரசினர்பாடசாலைத்தமிழர் ஆசிரியர் சங்கம்
கண்டிக்கிளையின் 1957ஆம் வருடக்காரியதரிசி

**திரு. மு. க. சுப்பிரமணியம்**

**அரசினர் சிரேஷ்ட தமிழ்ப்பாடசாலை. வெலம்பொடை.**



வி. பத்மராஜ் - அ. இ. 15.



டி. ஏ. என். துவான்அறீப்
அ. இ. 188.

# வனக்காட்சி

[முகம்மது. அமீன். தும்புளுவாவை]

யானும் நண்பனும் ஒருநாள் வனப்புமிகு வனக்காட்சியைக் கண்டு களிக்கச் சென்றோம். யாம்சென்ற பாதையின் இருமருங்கிலும் செழிப் புற்று வளர்ந்த மரங்கள் விண்ணைமுட்டி வானத்திற்கே தூண்போன்று காட்சியளித்தன. அடர்ந்து படர்ந்திருந்தமரங்கள் காற்றில் சலசலஎன ஆடி எம்மை வரவேற்றன. மெல்லியகாற்றில் இலைகள் ஒன்றையொன்று தட்டி எம்மைப்பற்றி ஏதோ இரகசியம்பேசிக்கொண்டன. மரங்களிலே வீற்றிருந்த மந்திகள் மனோவேகத்தில் மரத்துக்குமரம் தாவிப்பாய்ந் தன. துள்ளிவிளையாடும்புள்ளிமான்கள் எம்மை வேடுவரென்று எண்ணி காற்றினும் கடிதுவேகமாய்க் காட்டில் வளைந்து வளைந்து ஓடின. சிறு மரக்கொம்பர்களிலே மலர்கள் பூத்துக்குலுங்கின. அவை காற்றினால் அசைந்து நிலத்தைத்தொட்டுப் பூக்களை உதிர்ந்து மேலெழுவது எம் மைப் பொலிவுடன் வரவேற்பதுபோன்று காட்சியளித்தது. மரக்கிளை களிலே தொங்கும் பாம்பின் செட்டைகள் மாளிகைவாயில்களிலுள்ள திரைச்சீலைகளை ஞாபகப்படுத்தின. சிறுநீர்க் குட்டைகளிலே வெண் கொக்குகள் விளையாடின. ஒருபுறத்தில் பேய்கள் சத்தமிடுவதுபோல நரிகள் ஊளையிட்டன. வெளிச்சமேபடாத சில இடங்களில் ஆந்தை கள் பகற்பொழுதை இரவாகக் கழித்தன. வனத்தினிடையே சூரியன் தன்வெண்கதிர்களை மென்மையாகச்செலுத்திக்கொண்டிருந்தான். இடை யிடையே வீசும் மென்காற்று எம்மனதைச் சந்தோஷப் படுத்தியது. ஆயிரமாயிரம் சினிமாப்படங்களில்கூடக் கிடைக்காத இனியசங்கீதத்தைக் காட்டினிலே வசிக்கும் சிறுபட்சிகளிடமிருந்து பெற்றுக்கொண்டோம். இயற்கையாகவே அங்கு வளர்ந்திருந்த மலர்ச்செடிகள் நறுமணத்தை அள்ளிவீசின.

வண்ணமயில்களின் நடனமும் கருங்குயில்களின் இன்னிசையும் புள்ளிமான்கள் துள்ளிவிளையாடுதலும் வண்டுகள் ரீங்காரம் செய்தலும் அவ்வனத்தையே சினிமா அரங்கமாக்கி விட்டன, பிரியமனமில்லாது வனத்தைவிட்டு வீடுசேர்ந்தோம்.

---

சோம்பேறி இரண்டு முட்களுமில்லாத கடிகாரம்: அது நின்றாலும் ஓடினாலும் உபயோகமில்லை

# நகைச்சுவை

(செல்வி தபோநிதி கந்தையா . நுகேகொட)

சோகம், வீரம், காதல் போலவே நகைச்சுவையும் ஒன்று. உடலுக்கும் உள்ளத்துக்கும் அழுகைக்கொடுப்பது நகைச்சுவை. நகைச்சுவை பாரதியின் இனிய பாடல்களிலே, கம்பன் கவிதையிலே, சேக்கிழார் பெரியபுராணத்திலே. நக்கீரனின் பாட்டுக்களிலே, அரியதேவாரங்களிலே. இராமாயணம், பாரதம், விக்கிரமாதித்தன்கதை உட்பட சகப்பிரியர், டிக்கன்ஸ் ஆகியோரின்கதைகள் யாவற்றிலும் மிளிர்கின்றது. நாம் ஆனந்தித்து மகிழ்வதற்குப் பாடல்களைப் படித்தல்வேண்டும்.

மனதை மகிழ்விக்கும் தூய நிகழ்ச்சிதான் நகைச்சுவை. மகிழ்ந்த மனத்தின் மலர்ச்சிதான் உதட்டிலேதோன்றும் முறுவல். பிறரைப் புண்படுத்தாது எதையும் நிந்திக்காத நிகழ்ச்சி இவைகளால் பின்னப்பட்ட இன்பந்தரும்ரஸமே நகைச்சுவை. மனிதனின் அந்தராத்மாவைத் தொட்டு ஆநந்தம் தருவதுதான் உன்னதமிக்க உயர்ந்த நகைச்சுவையாகும்.

சிலர் பிறரைச்சிரிக்கவைப்பதற்காக அவர்கள்முன்னால் வேறுசிலரைப்பற்றிக் கேலிசெய்து நகைப்பார். இன்னும்சிலர் யாரையாவது எங்கேயாவது வழுக்கிவிழுந்தால் அதைப் பிரமாதப்படுத்திச் சொல்லிக்கொண்டே கடகடவென்று நகைப்பர். ஆனால் மற்றவர்கள் அதைக் கேட்டு ரஸிக்காவிடினும் தாங்கள் ஏதோபிரமாதமன நகைச்சுவையையளித்துவிட்டதாக எண்ணி தங்கள்எதிரில் இருப்பவர்களின் முதுகிலோ தோழிலோ பட் பட் என்று தட்டிநகைப்பர். இப்படி மற்றவர்களை வஞ்சித்தும் அவர்களைப் பகைத்துக்கொண்டும் நகைப்பது உண்மையான ஓர் நகைச்சுவையே அல்ல.

சாதாரணமாக நாம் நகைச்சுவையை இனிப்பென்றுதான் சொல்லவேண்டும். இருந்தாலும் இங்கே அதை உப்புக்குத்தான் ஒப்பிடவேண்டும். சாப்பாட்டிற்கு உப்பில்லாவிடில் ஒருபோதும் சுவைக்காது. விருந்தும் ரஸிக்காது. இதைப்போலவேதான் மனிதன் வாழ்க்கையில் எந்நிலையிலுஞ்சரி நகைச்சுவையை விரும்புகிறான். ரஸிக்கின்றான். துக்ககாமானநேரங்களைத்தவிர மற்றும் நேரங்களில் எங்கும் எப்போதும் மனிதன் எதிர்பார்க்கின்றான் என்றால் மிகையாகாது.

ஆதிகாலத்திலும் ராஜ சபைகளில் நகைச்சுவைக்கென விகடகவிகள் இருந்தார்கள். சிறுகதை, கவிதை, நாடகம் முதலியவைகளிற்கூட நகைச்சுவையான சம்பவங்கள் ஒன்றும் இல்லாமலில்லை. ஏன்? இப்

போதய சினிமாத் திரைப்படங்களிற்கூட அளவற்ற நகைச்சுவையான சம்பவங்களையெல்லாம் அள்ளித் தெளித்திருக்கின்றூர்கள். இதனுற்றுன் நகைச்சுவைக்கு அனுதிகாலம்தொட்டு முதலிடம்கொடுத்து அதை எந்த இடத்திலும் எந்த நிகழ்ச்சியிலும் சேர்த்துவைப்பதற்கு மக்கள் தயங்குவதில்லை.

---

## சிரிக்காதே.

கடைமுதலாளி:- [வேலைக்காரனிடம்] இன்று வியாபாரம் எப்படிநடந்திச்சு?

வேலைக்காரன்:— எல்லாம் நல்லாகத்தான் நடந்துச்சுங்கோ!

முதலாளி:— இன்றுவழக்கத்திற்குமாருக நடந்திச்சு என்றுசொல்லு.

வேலை:- அதையேன்பேசுறிங்க. மூடை மூடையாகஇல்ல நடந்திச்சு. நீங்கவாரதுக்குமுதலும் ஒருவன் இரண்டுமூடை உப்பு எடுத்திட்டுப் போரான்.

முதலாளி:- அடஉப்புத்தான் நம்மகடையிலே ஒளிஞ்சுபோச்சே!

வேலை:- ஏன் நம்மகடையிலே மூடை மூடையாக அடுக்கியிருக்கே.

முதலாளி:- அடபாவி! உப்பென்று உருளைக்கிழங்குமூடையைக்கொடுத்துட்டியே! என்முதலுக்குக் கொள்ளிவச்சுட்டையே!

வேலை:— எனக்கெப்படித்தெரியும். "உ" என்று எழுதியிருந்திச்சு. நான் நினைச்சேன் உப்புமூடைஎன்று.

முதலாளி:- இந்தாவிளக்கெண்ணை, உன்னைஇன்றேடிஸ்மிஸ்செய்கிறேன்.

வேலை:- ஒன்றைமறந்துவிட்டேனுங்க. ஒருபோத்தல் விளக்கெண்ணையும் வித்திருக்கேனுங்க.

[இ. நடராசா அ. இ. 19 கிளிநொச்சி]

## கணக்குப்புலி

அந்தஊரில் இப்படி ஒருசட்டம். அதாவது "செருப்பால் அடித்துவிடுவேன் என்றால் 50 ரூபாவும், செருப்பால் அடித்தால் 5 ரூபாவும் அபராதம் இருந்தது.

நீதிபதி:- குற்றவாளியைப்பார்த்து, என்ன குப்பா! சுப்பன் உன்னை அடித்தானு?

குப்பன்:- ஆமாங்க. என்னை அடிச்சான்.

நீதிபதி:- சுப்பனைப்பார்த்து. "உனக்கு 50 ரூபா அபராதம்விதிக்கிறேன்

குப்பன்:- இல்லீங்க! ரூபா அம்பத்தஞ்சுங்க.

நீதிபதி:- ஏன்! ஐம்பதுரூபாதானே.

குப்பன்:- "செருப்பாலே ஒண்ணை அடிச்சுப்புடுவேன்" எண்ணு சொல்லிவிட்டுஎன்னைஅடிச்சான். அடிச்சுப்புடுவேண்ணதுக்கு 50ரூபா அடிச்சதுக்கு 5 ரூபா ஆகமொத்தம் ரூபா 55.

இராசுபாஸ் சந்திரபோஸ் [தமிழ்உமைஏன். அ இ 152] சின்னபட்டி

# உள்ளூறும் உணர்வு வெள்ளம்

இராஜபாரதி

1. வான்புகழுந் தமிழகத்துத் தனிச்சொத்தாக
வந்துலவு மிளந்தென்றல் வாரிவந்த
தேன்கமழும் பூங்கொன்றை வாசமுண்டு
"தெம்மாங்கு" பாடிக்கொண் டிருந்தேனங்கே
மான்விழைந்த தான்பழகு மருட்சியோடு
மாந்தோப்புள் மஞ்ஞையசா யாடிவந்தாள்;
தீந்தமிழன் பெற்றெடுத்த தெய்வக் கோதை!
திருமகளின் மறுபிறவி!! திளைத்திருந்தேன்.

2. "செந்தமிழிற் பாடெ" ன்றாள், கம்பனானேன்!
சிலம்பலற ஆடென்றேன்; செழும்பொற் பாதம்
பந்தனைப்பட் டாடிற்றுப் பரதவேட்டில்
படிமுறையாய் வரைந்துள்ள கூத்தையெல்லாம்
விந்தையிலென் கண்ணிணைகள் சொக்கிநிற்க
வெளியுலக பந்தத்தை மறந்த நெஞ்சம்
அந்தமொடு ஆதியிலாப் பெருமைசான்ற
அற்புதத்தைக் கற்பனையிலாழ்த்து நேரம்;

3. கதகளியா, மணிபுரியா, கவினானுக்குக்
கள்ளூட்டு மபிநயமா, எல்லா வாட்டும்
விதவிதமாக் காண்பித்தாள்... வெறிபீறிட்டு
வெண்பாவாய், கலிப்பாவாய், விருத்தப் பாவாய்
இதயமதிற் கொப்பளித்த உணர்வு வெள்ளம்
ஏடறியா இலக்கியமாய்ப் பிரவாகிக்க,
அதையறியாப் "பாண்டித்யக் காய்ச்சல்" காரர்
அளக்கின்றார், யாப்பணியால்...ஐயோ, பாவம்!

4. சீர்த்தி கொளுஞ் சிந்தனையின் கோப்பால்யாத்த
செய்யுளை ரசித்தாட அவளைப் போல
வாய்த்தவுயர் ரசிகரையென் வாழ்நாழ்தன்னில்
வையகத்தி லெங்கணுமே காணவில்லை!
பூத்திருக்குங் கலைப்பூங்கா! அந்தப் பூவை
புலனென்னுங் கொடுக்காலே உறிஞ்சும் வண்டு
சாத்துகின்ற "கவிமாலை" ரசிக்கவன்றிச்
சக்கைபிளிந் தாராய்ச்சி நடத்தவாமோ...?

(வி. கி. இராசதுரை, அரசடி உயர்நிலைப்பள்ளி, மட்டக்களப்பு)

# விவேகப்போட்டி இல. 4.

வரக்கூடிய விடைகள் பரிசு ரூபா 350.

| 1 | 2 | 3 |
|---|---|---|
| ஆலம்:- விடம்<br>ஞாலம்:- ஊமத்தை<br>தூலம்:- நஞ்சு<br>நீலம்:- நஞ்சு | எரிவு:- கோபம்<br>நெரிவு:- பகை<br>பரிவு:- அன்பு<br>புரிவு:- அன்பு, ஆசை | இனம்:- சுற்றம்<br>கனம்:- பொன், பெருமை<br>தனம்:- சம்பத்து<br>வனம்:- அழகு |
| **4** | **5** | **6** |
| சுகம்;- சீக்கிரம்<br>தகம்:- வேகம்<br>வேகம்:- விரைவு<br>சோகம்:- துக்கம் | அயம்:- சந்தேகம்<br>ஐயம்:- சந்தேகம்<br>பயம்:- அச்சம்<br>ஆயம்:- வருத்தம் | சீலம்;-பழக்கம்<br>பலம்:- வலி<br>பெலம்:- பலம், உறுதி<br>வலம்:- வலி, கனம் |

விடைகளும் அவற்றின் பொருள்களும் கொடுக்கப்பட்டுள்ளன. நேயர்கள் ஆராய்ந்து விடைகளைத் தெரிவுசெய்க


# M.O. MURUGESAPILLAI & SONS

PRINTERS & BOOK SELLERS

எங்களிடம் தங்கட்குத் தேவையான பாடசாலைப் புஸ்தகங்களும், உபகரணங்களும், துப்பறியும் நாவல்களும், அறிவுக்குதகந்த நூல்களும், மற்றும் **தமிழ்வாணன், வாதராசன்** ஆகியோர் எழுதிய பலவித நூல்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**மறவாதீர்கள்:-**

தினதந்தி, டம்ஸ் (Times of Ceylon) தமிழ் சினிமா, அம்புலி மாமா, கல்கி, குமுதம், விகடன், கல்கண்டு போன்ற வாரப் பத்திரிகைகளும் எம்மிடம் நேரிலோ தபால்மூலமோ பெற்றுக்கொள்ளலாம். விலைசகாயம்.

**M. O. முருகேசபிள்ளை அன் சன்ஸ்**

அம்பகமுவாறேட் (போன் 329)

நாவலப்பிட்டி

# மாணவர்மன்றம்.

அன்பார்ந்த மருமக்களே!

புதுவருடம் நல்வருடமாகுக. பலமாணவர்களின்வேண்டுகோளின்படி கடதாசி விலையேறிய இக்காலத்திலும் வெற்றிமணியின் விலையைக் குறைத்துள்ளோம். வருடசந்தா ரூபா 2. இன்றே அனுப்புங்கள். அங்கத்தவர்கள் சிறுசிறு விஷயங்களை எழுதியனுப்புவது நன்று. வெற்றிமணியில் ஒருபக்கத்தில் அடங்கக்கூடியதாக இருக்கவேண்டும். எஸ். எஸ். ஸி வகுப்பு மாணவர்களின் நன்மைகருதி அவர்களுக்குப் பரீட்சைக்கு உதவியாக இருக்கக்கூடிய விஷயங்கள் ஒவ்வொரு இதழிலும் வெளியிடப்படும். கட்டுரைப்போட்டியில் உங்கள் கைவரிசையைக் காட்டுங்கள்பார்க்கலாம். பரீட்சைகளில் "நயம் எழுதுக" என்று ஒருவினா கேட்கப்படுவதுண்டு. 1-6-57 இதழில் செய்யுளுக்கு நயம் எழுதும்முறையை மாணவர் அறியக்கூடியதாக "**கவிதை நயப்பதற்கே**" என்றவிஷயம் வெளியிடப்படும்.

—மணிமாமா—

## புதிய அங்கத்தவர்கள்

227. செல்வி- வெஸியா இஸ்மாயில், கப்புவத்தை, வெலிகாமம்.
228. அ. பொ. அழகர் C/o அ. பொம்மைய கவுண்டர், வடக்குத்தெரு சின்னாளபட்டி. மதுரைமாவட்டம் S. I.
229. எம். எஸ். ஏ. முத்தலிபு, 8-ம் வாட் பெரியகிண்ணியா.
230. ஐ. எம் தாகிர், 8-ம் வாட் தக்கியாவீதி, பெரியகிண்ணியா.
231. செல்வி- கே. கமலம், C/o கா. தமிழ்த்தம்பி, தே. உ. பள்ளி சின்னாளபட்டி.
232. எம். ஏ. அனஸ், மொஹிதீன், மரைக்கார்வீதி, புத்தளம்.
233. அ. கருணேஸ்வரன், "அருணகிரி" 114, றத்மல்கடுவ, கம்பளை.
234. வி. ரி. இராஜா " " " "
235. றிச்செட் காசிநாதர், 15, கதிராமர் வீதி, அமிர்தகளி மட்டக்களப்பு.

## பேனா நண்பர்கள்

166. செ. மு. செ. முகம்மது சதக்கதுல்லாஹ், 265, 5-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

## கட்டுரைப்போட்டி

தமிழைத் தாய்மொழியாகக்கொண்டவர்கள் சிங்களத்தைக் கற்பதனால் வருங்காலத்தில் பயனடைவார்களா? இதுதான்விஷயம். இதற்குச்சாதகமாகவோ உங்கள் அபிப்பிராயங்களை எழுதியனுப்புக. 175 சொற்களுக்குமேல் எழுதக்கூடாது. விஷயங்கள்யாவும் 25-5-57க்கு முன் வெற்றிமணி, நாவலப்பிட்டி என்ற விலாசத்திற்கு அனுப்பப்படவேண்டும். ரூபா 3, ரூபா 2 பெறுமதியான புத்தகங்கள் பரிசாக இருவருக்குக் கொடுக்கப்படும். அங்கத்தவர்களாகச் சேர்ந்துள்ளவர்களும் 25-5-57க்குமுன் சேருகின்றவர்களும் பங்குபற்றலாம்.

# ஏன்நாம் கீழ்ப்படியவேண்டும்? (4)

## குளிப்பாட்டப்படுவதை வெறுத்த நாய்.

மு. க. சுப்பிரமணியம்　　　　வெலம்பொடை

மேரிஎன்ற சிமாட்டி "வீமன்" என்ருெருநாயை அன்பாக வளர்த்துவந்தாள். வீமனுக்கு மேரியிடம் அதிக அன்பு. மேரி உலாவச்செல்லும்போதெல்லாம் வீமனும் கூடச்செல்லும். இருக்கும்பொழுது அவளின் காலடியிற் கிடக்கும். வீமனிடம் ஒருகெட்டகுணம் இருந்தது. அது தன்னை எவரும் குளிப்பாட்டப்படுவதை விரும்புவதில்லை. தண்ணீருக்குள் விடப்பட்டதும் கோபமடைந்து மூர்க்கத்தனமாக நடந்துகொள்ளும். எந்தவேலைக்காரரும் கிட்டச்செல்லப் பயப்படுவார்கள்.

வீமன் தானகக்குளிக்கவிரும்பும்வரையும் அதைக்கவனிப்பதில்லைஎன மேரி தீர்மானித்தாள். உலாவச்செல்லும்பொழுது வீமனைக்கூட்டிச்செல்லவில்லை. வீட்டிலிருக்கும்பொழுது அதைக் கிட்டவரவேவிடவில்லை. அதைத் தடவுவதுமில்லை. அன்பாக அதனுடன் விளையாடுவதுமில்லை. மேரி கவலைகொண்டாள்.

வீமனுக்கு மேரியின் செயல்கள் மிகுந்த கவலையைக்கொடுத்தது. வீமனிடம் சந்தோஷமே காணப்படவில்லை. ஒருநாள் காலை வீமன் மேரியின்காலடியில் போய்க்கிடந்துகொண்டு அவளின்முகத்தை அண்ணாந்து பார்த்தது. "என்னல் இனி இந்நிலையைப் பொறுக்கமுடியாது. யான் இனிமேல் உங்கள் விருப்பப்படியே நடப்பேன்" என்று கூறுவதுபோல இருந்தது அதன்பார்வை. மேரி வீமனுக்குப்புத்தி வந்துவிட்டது என்பதையறிந்து சந்தோஷப்பட்டாள். குளிப்பாட்டக் கூட்டிச்சென்ருள். நன்ருக உடம்பைத்தேய்த்தாள். என்றுமில்லாதவகையில் வீமன் பொறுமையாகக் குளித்தது. குளித்து முடிந்ததும் வீமன் சந்தோஷமிகுதியால் குரைத்து வாலையாட்டி மேரியின் மேல் தாவிப்பாய்ந்தது.

இதன்பின்னர் மேரி உலாவச்செல்லும் பொழுதெல்லாம் வீமனைக் கூட்டிச்சென்ருள். வீமன் குளிப்பாட்டப்படுவதை ஒருநாளும்வெறுக்கவில்லை.

வீமன் தன் எஜமாட்டியை வருத்தவிரும்பவில்லை. எஜமாட்டிவருந்துவதக்கண்டு தானும் பொறுக்கமுடியாத கவலையடைந்தது. ஒருநாய் இப்படிச்செய்தால் பிள்ளைகளாகிய நீங்கள் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச்செய்யும் உங்கள் பெற்ருேர்களை வருத்துவதற்காக எவ்வளவு துக்கப்படவேண்டியவர்கள் என்பதைச் சிந்திப்பீர்களாக.

**ஏன்நாம் கீழ்ப்படிகின்ருேம்?** 1. நல்ல குணம்சொல்வதால் (2) எமக்குவழி தெரியாதபடியால் (3) கீழ்ப்படிவு தாய்தந்தையர்களை மகிழச்செய்வதால்

# STUDIO JAYANTHI,

## PHOTO ARTISTs

LIFE SIZE

ENLARGE MENTS

INDOOR & OUT DOOR

GROUPS : EXPRESS

DEVELOPING

PRINTING AND ENLARGING

AND PICTURE FRAMING

தங்கள் தேவைக்கென்றே என்றும்
திறந்திருக்கின்றது
கம்பளை நியூநுவரேலியாரோட்டில்
புதிதாகத் திறக்கப்பட்ட

ஸ்டுடியோ ஜயந்தி

○ விவாக தேவைக்கு
○ விளையாட்டு வைபவங்கட்கு
○ விருந்துபசாரங்கட்கு
○ விநோத வேடிக்கைகட்கு
○ விரும்பிய தோற்றங்களில்
○ விதவித நிறங்களில்
○ விரிவு படுத்தி
○ விரைவில் பெறுவதற்கு

விஜயம் செய்யுங்கள், சிறந்தவேலை குறைந்தவிலை.

**NewNuwaraEliya Road-Gampola.**

---

## மதுரைத்தமிழ்ப் பேரகராதி

சிரேஷ்டபாடசாலைகளிலும் நூல் நிலையங்களிலும் அவசியம் இருக்க வேண்டியது. இரண்டுபாகங்கள்.

**முதலாம்பாகம் 1230 பக்கங்கள்**
**இரண்டாம்பாகம் 1,058 பக்கங்கள்**

இரண்டுபாகங்களின் நிறையும்
9 இறாத்தல்.

**இரண்டு பாகங்களும் விலை 30 ரூபா**

தபாற்செலவு ரூபா 2. வி. பி. பி. யில் அனுப்ப ரூபா 5. முற்பணமாக அனுப்புக.

Vettimani — Nawalapitiya

---

## Mani Grinding Mills.

சுத்தமான
கொச்சிக்காய்,
மசாலைத் தூள்,
சில்லறையாகவும் மொத்தமாகவும் அரைத்துக்
கொடுக்கப்படும்.

**மணி கிறைண்டிங் மில்ஸ்,**
**83 அம்பகமுவவீதி,**
**கம்பளை.**

Registered as a News paper at the G P O No 59 / 300


# அட்சரகேத்திரகணிதங்கள்

6-ம் வகுப்புத்தொடக்கம் S.S.C. வகுப்புவரை

அட்சரகணிதம் புதியதொருபாடமன்று. எண்கணிதம் படிப்பிக்கப்படும் போது பல வேளைகளிற் சில அட்சரகணித விதிகளும் படிப்பிக்கப் பட்டுவிடுகின்றன. ஆகவே அட்சர கேத்திர கணிதங்களில் மாணவர் தேர்ச்சி அடைவதற்கு ஒரேயொரு வழி, 6-ம் 7-ம் வகுப்புகளில் அவற்றின் ஆரம்பவிதிகளைத் தக்கமுறையில், அவர்களுக்கு விளங்க வைப்பதே.

இதற்கேற்ற உயரிய சிறந்த நூல்,
பரமேஸ்வரக் கல்லூரி கணித — விஞ்ஞான ஆசிரியர்
திரு. ச. சிதம்பரப்பிள்ளை B.A., B. sc. (Lond)
அவர்கள் எழுதிய

## அட்சர கேத்திர கணிதங்களே.

| | | | |
|---|---|---|---|
| அட்சர கணிதம் | 1-ம் புத்தகம் | ரூபா | 3.00 |
| ,, ,, | 2-ம் புத்தகம் | | 3.00 |
| கேத்திரகணிதம் | 1-ம் புத்தகம் | | 3.00 |
| ,, ,, | 2-ம் புத்தகம் | | 2.00 |

தபாற்செலவு வேறு

எல்லாப் புத்தகசாலைகளிலும்
இடைக்கும்

தனலக்குமி புத்தகசாலை,
சுன்னுகம்.


அச்சுப்பதிப்பு:- சரவண அச்சகம், நாவலப்பிட்டி.
பதிப்பாசிரியர்:- K. V. மகேந்திரன்.